பக்கங்கள் - 19

# காலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2057 | மார்கழி 22 வியாழக்கிழமை 08.01.2026 | அதிர்வு 161

## இலங்கைக்கு வருகின்றார் சீன வெளியுறவு அமைச்சர்



சீன வெளியுறவு அமைச்சர் வாங் யி, இலங்கைக்கு இரண்டு நாள்கள் அதிகாரபூர்வ பயணத்தை மேற்கொள்ளவுள்ளார்.

02▶

# தமிழர்களை ஏமாற்றாது அநுர அரசு!



### நிரந்தர அரசியல் தீர்வு வழங்கப்படும் என்றும் வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் உறுதி

தமிழ் மக்களின் நீண்ட கால அரசியல் பிரச்சினைகளுக்கு நிரந்தரமான தீர்வை வழங்குவதில் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க தலைமையிலான அரசு உறுதியுடன் செயற்படும் என்று வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார். தமிழ் மக்களை இந்த அரசு ஒருபோதும் ஏமாற்றாது என்றும் அவர் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

“கடந்த காலங்களில் பல அரசுகள்

03▶

### டித்வா புயலால் இலங்கைக்குப் பேரிழப்பு

# சர்வதேச நன்கொடையாளர் மாநாட்டை உடன் நடத்துங்கள்

### அரசிடம் சஜித் மீண்டும் வலியுறுத்து



“டித்வா சூறாவளியால் இலங்கைக்குப் பேரிழப்பு ஏற்பட்டுள்ளது. எனவே, விரைந்து சர்வதேச நன்கொடையாளர் மாநாட்டை நடத்துங்கள்.”

– இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு வலியுறுத்தியுள் ளார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

“டித்வா சூறாவளியால்

02▶




அரசியல் கட்சிகள், கட்டமைப்புகள், கூட்டுக்கள் போன்றவற்றில் பொதுவாக முடிவுகள் எடுக்கப்படுவதற்கு முன்னர் உள்ளாந்தரமாக உள் மட்டத்தில், சிறிய குழுக்களில் ஆலோசனைகள் நடத்தப்படுவது வழமை. அத்தகைய உட்கட்சி கூட்டங்களில் எடுக்கப்படும் முடிவே பின்னர் வெளிப்படையான முடிவாக அம்பலமாகும்.

உதாரணத்துக்கு சுமார் கால் நூற்றாண்டுக்கு முன்னர் நடைபெற்ற ஒரு சம்பவத்தைக் குறிப்பிடலாம் என்று நினைக்கிறேன். 2001 ஆம் ஆண்டில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் பொதுஜன முன்னணி அரசு அதிகாரத்தில் இருந்தது.

அச்சமயத்தில் அமைச்சரவை செயற்பட்டாலும் கூட, சந்திரிகாவின் ஜனாதிபதி இல்லத்தில் உள்ளக அமைச்சரவைக் கூட்டம் ஒன்று அவருக்கு நம்பிக்கையான சிறிய எண்ணிக்கையான அமைச்சர்களுடன் இயங்கி வந்தது. பொதுவாக அதனை

03▶





# கல்வி அமைச்சரான பிரதமர் ஹறிணி உடனடியாகப் பதவி விலக வேண்டும்!

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் கோரிக்கை

கல்வி அமைச்சரான பிரதமர் ஹறிணி அமரசூரிய உடனடியாகப் பதவி விலக வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் நேற்று ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவிக்கையில்,

"ஹறிணி அமரசூரிய, கல்வி அமைச்சில் பணியாற்றும் முறைமைகள் தொடர்பில் மக்கள் மத்தியில் கடும் அவமானம் உள்ளது.

இவரால் மாணவர்களுக்கான அடிப்படை வசதிகள், நல்ல கல்வி தரம் மற்றும் ஆசிரியர்களின் நலன் போன்ற அடிப்படைத் தேவைகள் முழுமையாகப் புறக்கணிக்கப்படுகின்றன. இந்த நிலைமை அவர் மீதான மக்களின் நம்பிக்கையை இழக்கச் செய்துள்ளது." – என்றார்.

# ஒரு வார்த்தைக்காகப் பதவி விலக கோருவது நெறிமுறையற்ற செயல்

## அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ சுட்டிக்காட்டு



ஒரு பாடத்தொகுதியில் உள்ள ஒரு வார்த்தையில் உள்ள குறைபாட்டுக்காக, கல்வி அமைச்சரான பிரதமர் ஹறிணி அமரசூரியவை, பதவி விலக நிர்ப்பந்திப்பது நெறிமுறையற்றது என்று அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்,

"கல்விச் சீர்திருத்தங்களில் குறைபாடுகள் இருந்தாலோ அல்லது முன்மொழியப்பட்ட சீர்திருத்தங்கள் நாட்டுக்கும் மாணவர்களுக்கும் எதிரானதாக இருந்தாலோ, சம்பந்தப்பட்ட அமைச்சர் பதவி விலக வேண்டும்.

பாடத் தொகுதியில் உள்ள ஒரு வார்த்தையின் அடிப்படையில், பதவி விலகுமாறு கோருவது நியாயமற்றது." – என்றார்.

---

### சர்வதேச...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாட்டுக்கு ஏற்பட்ட இழப்பு பெரும் இழப்பாகும். மிகப்பெரிய நிதி இழப்புகளை இது ஏற்படுத்தியுள்ளது.

அரச தரப்பில் இருக்கும் பலர் என்ன விடயங்களைச் சொன்னாலும், இந்த இழப்பை எதிர்கொண்டு, அதைத் தாண்டி வேகமாக முன்னேறுவதற்குச் சர்வதேச நன்கொடையாளர் மாநாட்டை கூட்ட வேண்டிய தேவைப்பாடு எமக்கு காணப்படுகின்றது.

இது குறித்துப் பேசும்போது, அரசு இதில் அலட்சியமாக இருப்பது போலவே தெரிகிறது.

உலக வங்கி நடத்திய மதிப்பீட்டின் பிரகாரம், உட்கட்டமைப்பு வசதிகளில் மட்டும் 4.1 பில்லியன் அமெரிக்க டொலர் இழப்பு ஏற்பட்டுள்ளது.

எனினும், நமது நாடு இதுவரை பெற்றுள்ள நன்கொடைத் தொகை ஒரு பில்லியன் அமெரிக்க டொலர்களையே நெருங்கியுள்ளது.

வாழ்வாதாரங்கள் சீரழிந்து போய், பல தொழில்கள் அழிந்து போயுள்ளன.

ஜனாதிபதி வழங்கிய வாக்குறுதிகளை முழுமையாக நிறைவேற்றுமாறு நாம் அரசிடம் கேட்டுக்கொள்கின்றோம். கூறிய விடயங்களை அவ்வாறே நடைமுறைப் படுத்துங்கள்.

அவ்வாறே சர்வதேச நன்கொடையாளர் மாநாட்டைக் கூட்டுங்கள். தாமதமின்றி உலகின் கவனத்தை நாட்டின் பக்கம் திருப்பிக்கொள்ளுங்கள்.

சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சு நடத்தி சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளை மாற்றியமைப்பதற்கு நடவடிக்கை எடுங்கள்." – என்றார்.

### இலங்கைக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்வரும் 13 மற்றும் 14 ஆம் நாள்களில் அவர் இலங்கையில் தங்கியிருப்பார்.

இலங்கை வரும் சீன வெளியுறவு அமைச்சர் வாங் யி, முக்கிய கொள்கை அறிவிப்புகளை வெளியிடுவார் என்றும், முக்கிய பொருளாதார முயற்சிகள் குறித்து அறிவிப்பார் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

சீன முதலீடுகள், புதிய பொருளாதார ஒத்துழைப்பு திட்டங்கள் மற்றும் முன்மொழியப்பட்ட இலங்கை – சீன சுதந்திர வர்த்தக உடன்பாட்டின் முன்னேற்றம் ஆகியன குறித்தும் அவர் முக்கிய அறிவிப்புகளை வெளியிடுவார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அம்பாந்தோட்டை எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் மற்றும் ஏனைய மூலோபாய உள்கட்டமைப்பு மற்றும் முதலீட்டு முயற்சிகள் போன்ற பெரியளவிலான அபிவிருத்தித் திட்டங்கள் குறித்த அறிவிப்புகளும் எதிர்பார்க்கப்படுகின்றன.

இந்தப் பயணத்தின் போது, ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, பிரதமர் ஹறிணி அமரசூரிய மற்றும் மூத்த அரச தலைவர்கள், ஜே.வி.பியின் பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா ஆகியோருடன் சீன வெளியுறவு அமைச்சர் இரு தரப்பு கலந்துரையாடல்களை நடத்துவார்.

சீன வெளியுறவு அமைச்சர் வாங் யி, சீன – இலங்கை இராஜதந்திர உறவுகளின் 65 ஆவது ஆண்டு விழாவில் கலந்து கொள்வதற்காக, 2022 ஆம் ஆண்டு ஜனவரியில் கடைசியாக இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# கல்வி அமைச்சர் பதவியில் இருந்து ஹறிணி விலகாவிடின் மக்கள் போராட்டம் வெடிக்கும்

## மொட்டுக் கட்சி பகிரங்க எச்சரிக்கை




கல்வி அமைச்சராகவும் பிரதமராகவும் பதவி வகித்து வரும் ஹறிணி அமரசூரிய உடனடியாகக் கல்வி அமைச்சர் பதவியிலிருந்து விலகாவிடின், நாடளாவிய ரீதியில் மக்கள் போராட்டம் வெடிக்கும் என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

"ஒரே நபர் பிரதமர் பதவியையும் கல்வி அமைச்சர் பதவியையும் ஒரே நேரத்தில் வகிப்பது அரசியல் நெறிமுறைகளுக்கும் நிர்வாக ஒழுங்குக்கும் முரணானது.

குறிப்பாக, கல்வித்துறை தற்போது பல்வேறு சவால்களை எதிர்கொண்டு வரும் நிலையில், அதற்கான முழுக் கவனமும் பொறுப்பும் அவசியமாகும்.

கல்வி துறையில் தீர்க்கப்படாத பிரச்சினைகள், ஆசிரியர் நியமனங்கள், பல்கலைக்கழக நிர்வாக விவகாரங்கள் மற்றும் மாணவர்களைப் பாதிக்கும் கொள்கை முடிவுகள் தொடர்பில் அரசின் செயற்பாடுகள் மக்களிடையே பெரும் அதிருப்தியை உருவாக்கி வருகின்றது.

இந்த நிலை தொடருமானால், மக்கள் தங்களது அதிருப்தியை வீதியில் வெளிப்படுத்த வேண்டிய சூழ்நிலை உருவாகும்.

அரசு மக்களின் குரலைக் கேட்காவிட்டால், மக்கள் தங்கள் உரிமைகளைப் பெற போராட்டத்தைத் தவிர வேறு வழியில்லாமல் போவார்கள். அதற்கான முழுப் பொறுப்பும் அரசின் மீதே இருக்கும்.

கல்வி அமைச்சுப் பொறுப்பை முழுமையாகக் கவனிக்கக்கூடிய தனி அமைச்சரை நியமிப்பதே தற்போதைய சூழ்நிலைக்கு ஏற்ற தீர்வாக இருக்கும்."
– என்றார்.

---

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

'கிச்சன் கபினட்' என்று நையாண்டியாகக் குறிப்பிடுவார்கள். அந்த கிச்சன் கபினட் ஒருநாள் முன்னிரவில் கூடி ஒரு முடிவு எடுத்தது. அரசின் பங்காளிகளான ரவூப் ஹக்கீம் தலைமையிலான சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸை அரசு பக்கத்தில் இருந்து வெளியேற்றும் முடிவை அது எடுக்க, அடுத்த நாள் காலையில் அமைச்சரவையிலிருந்து ஹக்கீமைத் தூக்கிக் கடாசும் அறிவிப்பு வெளியானது. கடைசியில் அதனால் சந்திரிகாவின் அந்த அரசு கவிழ்ந்து, நேரத்துடன் பொதுத்தேர்தலுக்குப் போக வேண்டிய தேவை உருவானது. அதன் விளைவாக பிரதமர் ரணில் விக்ரமசிங்கவின் அரசு 2001 டிசம்பரில் மலர்ந்தது.

அரசியல் கட்சிகள் பலவற்றுக்குள்ளும் இத்தகைய கிச்சன் கபினட்டுகள் இயங்குகின்றமை பற்றி நாங்கள் அறிந்திருக்கிறோம்.

இனி விடயத்துக்கு வருகிறேன்.

இலங்கைத் தமிழரசு கட்சியைப் பொறுத்த வரை அதற்கு நாடாளுமன்ற குழு ஒன்று இருக்கின்றது. எட்டு எம்பிக்கள் அதில் அங்கம் வகிக்கின்றனர். அதன் தலைவர் இப்போது அரசியலில் அதிகம் சர்ச்சையில் சிக்கி இருக்கும் சிறிதரன். அந்த நாடாளுமன்றக் குழு தனக்கென நாடாளுமன்றத்தில் ஒதுக்கப்பட்ட அறையில் அவ்வப்போது கூடி ஆராயும். ஆனால் அதேசமயம் அந்த நாடாளுமன்றக் குழுவுக்கு மேலதிகமாக 'கிச்சன்' நாடாளுமன்றக் குழுவும் இருக்கின்றதோ என்னவோ...?

தற்சமயம் நாடாளுமன்ற கூட்டத் தொடர் நடைபெறுகின்ற காரணத்தினால் எல்லா எம்.பிக்களும் கொழும்பில் நிற்கின்றனர்.

அவர்களில் சாணக்கியன் மற்றும் மருத்துவர் சத்தியலிங்கம் ஆகியோரைத் தவிர்த்த மிகுதி அறுவரும் பங்கு பற்றிய ஒரு 'கிச்சன் கபினட்' கூட்டம் ஒன்று நேற்று முன்தினம் முன்னிரவு முதல் நேற்று விடிகாலை ஒன்றரை மணி வரை நடைபெற்றதாகத் தெரிய வருகிறது. கொழும்பில் தமிழரசுக் கட்சியின் ஓர் எம்.பியின் தங்குமிடத்தில் இது நடைபெற்றதாக கூறப்பட்டது. ஆராயப்பட்ட விடயங்களின் விவரங்கள் தெரியவரவில்லை. ஆனால் இரவிரவாக விடி காலை வரை நீண்ட நேரம் ஆராய்வுகள் இடம்பெற்று இருக்கின்றன.

அன்றைய தினம் காலையில் ஒரு சில எம்.பிக்கள் மட்டும் தங்களுக்குள் நாடாளுமன்றத்தில் இருந்து பேசிக் கொண்டிருந்தபோது கட்சியின் அரசியல் குழுவில் சிறிதரன், சிறிநேசன் ஆகியோருக்கு எதிராக அண்மையில் எடுக்கப்பட்ட முடிவுகள் குறித்துத் தங்களுக்குள் கருத்துக்கள் பரிமாறிக் கொண்டனர். சிறிநேசன் பாவம், தேவையில்லாமல் சிக்கிவிட்டார் என்றும், சிறிதரன் தம்முடைய நடவடிக்கைகளுக்காக விளைவுகளை எதிர்கொள்ளத்தான் வேண்டும் என்றும் ஓரிரு எம்பிக்கள் அப்போது கருத்து தெரிவித்தனர் எனத் தெரிகின்றது. ஆனால் அவர்களும் கூட, அன்றிரவு விடிய விடிய சிறிதரனுடன் சேர்ந்து அமர்ந்திருந்து மந்திராலோசனையில் ஈடுபட்டு இருக்கிறார்கள் என்றும் தெரிகிறது. இடத்திற்கு ஏற்றவாறு தந்திரமாகப் பேசுகின்ற பலரும் அரசியல் தலைவர்களாகி விட்டமையால் வந்த நிலைமை இது...!

---

## தமிழர்களை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ் மக்களுக்கு வாக்குறுதிகள் வழங்கிய போதிலும், அவை நடைமுறைப் படுத்தப்படவில்லை. அந்தத் தவறுகளை மீண்டும் செய்யாமல், உண்மையான மற்றும் நீடித்த அரசியல் தீர்வை வழங்குவதற்காக தற்போதைய அரசு பொறுப்புடன் செயற்படும்.

தமிழ் மக்களின் அரசியல் உரிமைகள், சமத்துவம், பாதுகாப்பு மற்றும் அதிகாரப் பகிர்வு போன்ற அடிப்படை விடயங்கள் தொடர்பில் விரிவான கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்படும்.

அனைத்து இன மக்களையும் உள்ளடக்கிய ஒற்றுமையான நாட்டை கட்டியெழுப்புவதே இந்த அரசின் நோக்கமகனும்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது நாட்டின் உள்நாட்டு விடயமாக இருந்தாலும், சர்வதேச சமூகத்திடம் இலங்கை அரசு வெளிப்படையாகவும் பொறுப்புடனும் செயற்படுவதாக நம்பிக்கை அளிக்க வேண்டிய தேவையும் உள்ளது.

தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகள் மதிக்கப்பட வேண்டும். அவர்களது நம்பிக்கையை மீட்டெடுப்பதே இந்த அரசின் முதன்மையான இலக்கு. அதற்காக அரசியல் ரீதியான நிரந்தர தீர்வு வழங்கப்படும் என்று உறுதியளிக்கின்றோம்.

வாக்குறுதி மட்டும் அல்ல, அதை நடைமுறையில் நிறைவேற்றும் அரசாக இந்த அரசு செயற்படும்." – என்றார்.

# ஹைக்கூவில் கலப்போம் கவிகளாய் உயர்வோம்

46ஆவது ஆண்டில் பயணிக்கத் தொடங்கும் புதிய அலை கலை வட்டம் அதன் இளைஞர் அணி மூலமாக மாதாந்தம் நடத்தி வரும் ஹைக்கூ கவியரங்கத்தின் 8ஆவது அமர்வு எதிர்வரும் 11ஆம் திகதி கொழும்பு – 13 புதுச்செட்டித்தெருவில் அமைந்துள்ள எக்ஸலனஸ் சர்வதேச பாடசாலை வளாகத்தில் நடைபெறவுள்ளது .

இந்தக் கவியரங்குக்குத் தலைமையை ஏற்கின்றார் புதிய அலை கலை வட்டத்தின் மகளிர் அணியின் உப தலைவி கவிதாயினி திருமதி ஷர்மிளா பார்த்திபன்.

இந்த அமர்வில் கதை சொல்லுதல் மற்றும் கவிப் பயிற்சி போன்ற நிகழ்வுகளும் இடம் பெறவுள்ளன.

நிகழ்வு பற்றிய மேலதிக விவரங்களை அறிய விரும்புவோர் 075 4880172 என்ற வட்சப் இலக்கத்தில் தொடர்பு கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.




# கலை, கலாசாரப் போட்டிகளில் வாய்ப்பு




புதிய அலை கலை வட்டம் வருடாந்தம் கலாமித்ரா விருது விழாவை முன்னிட்டு நடத்தும் கலை, கலாசாரப் போட்டித் தொடரின் அம்சமாக எதிர்வரும் 18ஆம் திகதி மாலை 3 மணிக்குப் பாடல் மற்றும் அறிவிப்பாளர் போட்டிகள் நடைபெறவுள்ளன.

கொழும்பு – 13, புதுச்செட்டித்தெருவில் அமைந்துள்ள எக்ஸலனஸ் சர்வதேச பாடசாலை வளாகத்தில் நடைபெறும் இந்தப் போட்டிகளுக்கு விண்ணப்பித்தவர்கள் கலந்துகொள்ளலாம் எனவும், விண்ணப்பிக்கத் தவறியவர்கள் அன்றைய தினம் நேரில் கலந்துகொள்ளவும் முடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.





# வல்வெட்டித்துறையில் பட்டத்துடன் இழுத்துச் செல்லப்பட்ட இளைஞன்

தைப்பொங்கல் பண்டிகையை முன்னிட்டு யாழ்ப்பாணம், வல்வெட்டித்துறையில் வழமைபோல இம்முறையும் பட்டத் திருவிழா கோலாகலமாக ஆரம்பமாகியுள்ளது.

எனினும், நேற்றைய கொண்டாட்டத்தின் போது எதிர்பாராத விதமாக இளைஞர் ஒருவர் பட்டத்துடன் வானில் இழுத்துச் செல்லப்பட்ட சம்பவம் ஒன்று பதிவானது.

பல இளைஞர்கள் இணைந்து ஒரு பாரிய படலப் பட்டத்தை நீண்ட தொடு வைக்கயிறு மூலம் வானில் ஏற்ற முயற்சித்தனர்.

அப்போது வீசிய பலத்த காற்றினால் பட்டத்தின் விசை அதிகரித்து, வடத்தைப் பிடித்துக்கொண்டிருந்த இளைஞர்களில் ஒருவர் சடுதியாக வான்நோக்கி இழுத்துச் செல்லப்பட்டார்.

கீழிருந்த ஏனைய நண்பர்கள் மற்றும் பொதுமக்கள் ஒன்றிணைந்து செயற்பட்டு, வடத்தை மெல்ல மெல்லக் கட்டுப்படுத்தி அந்த இளைஞரை பாதுகாப்பாகத் தரையிறக்கினர்.

வல்வெட்டித்துறைப் பகுதி விசித்திரமான மற்றும் பிரம்மாண்டமான பட்டங்களை உருவாக்குவதில் உலகப் புகழ்பெற்றது.

ஒவ்வொரு ஆண்டும் தைப்பொங்கலை முன்னிட்டு இங்கு நடைபெறும் பட்டப்போட்டிகளில் ஆயிரக்கணக்கான மக்கள் கலந்துகொள்வர்.

நேற்றைய சம்பவத்தில் இளைஞர் எவ்வித காயமுமின்றி உயிர் தப்பிய நிலையில், பாதுகாப்பு நடைமுறைகளை பின்பற்றி பட்டங்களை ஏற்றுமாறு பல்வேறு தரப்பினரும் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# அரசு விடும் புதுக் கதை!

சுமார் 260 க்கும் அதிகமான மனித உயிர்களைக் காவு கொண்டு, ஐந்நூறுக்கும் அதிகமானோருக்கு காயங்களை ஏற்படுத்திய ஈஸ்டர் ஞாயிறு தொடர்க் குண்டுத் தாக்குதல்கள் நடைபெற்று ஏழாம் ஆண்டு நிறைவை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றோம்.

இந்த தாக்குதல் சம்பவங்கள் தொடர்பாக சந்தேக நபர்கள் பெரும் எண்ணிக்கையில் கைது செய்யப்பட்டு, தடுத்து வைக்கப்பட்டு, விசாரணை செய்யப்பட்டு வருகின்றார்கள். இருந்த போதிலும், உண்மையான சூத்திரதாரிகள் இன்னும் சிக்கவே இல்லை என்ற மனக்குறை பாதிக்கப்பட்ட தரப்புகளுக்கு அதிகம் உள்ளது.

இது தொடர்பாக இந்தக் குண்டுத் தாக்குதலில் அதிகம் பாதிக்கப்பட்ட கிறிஸ்தவ மக்களின் பிரதிநிதியாக கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் தொடர்ந்து குரல் எழுப்பி வருகிறார்.

இவ்விவகாரத்தில் இதற்கு முந்திய ஆட்சியாளர்களைத் தொடர்ந்து குறை கூறி வந்த தேசிய மக்கள் சக்தியினர் தாங்கள் ஆட்சிக்கு வந்தால் சூத்திரதாரிகளை விரைந்து சட்டத்தின் முன் நிறுத்துவோம் என்றும் சூளுரைத்து வந்தனர்.

இப்போது அவர்கள் அதிகாரத்துக்கு வந்து ஒன்றரை ஆண்டுகள் பூர்த்தியாகும் நிலைமை வந்துள்ளது. ஆயினும் விவகாரத்தில் திருப்திதரக்கூடிய முன்னேற்றம் ஏற்பட்டிருப்பதாகத் தெரியவில்லை.

கடந்த வருடம் ஏப்ரல் 21ஆம் திகதி இத்தாக்குதலின் ஆறாம் ஆண்டு நிறைவுக்கு முன்னர் சூத்திரதாரிகளை சட்டத்தின் முன்னிறுத்தி அம்பலப்படுத்துவோம் என்று ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க கூட வாக்களித்து இருந்தார்.

ஆனால் எதுவும் நடக்கவில்லை. ‘செல்லும் செல்லாததெல்லாம் செட்டியார் தலை மீது’ என்பது போல வேறு ஒரு வழக்கின் பெயரில் கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் பிள்ளையானைக் கைது செய்து ஆரவாரம் பண்ணியதோடு விடயம் கிணற்றில் போட்ட கல்லாக முடங்கி கிடக்கின்றது.

இந்த விவகாரத்தில் அரசாங்கம் காத்திரமாக எதுவும் செய்யவில்லை என்ற குற்றச்சாட்டு தொடர்ந்து வலுவடைந்து வரும் பின்னணியில், இப்போது புதிய தகவல் ஒன்றை - கயிறு ஒன்றை - அவிழ்த்து விட்டிருக்கின்றார் பொதுப் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால.

2019 ஈஸ்டர் தாக்குதல்களுடன் தொடர்புடைய சாரா ஜாஸ்மின் என்றும் அழைக்கப்படும் புலஸ்தினி மகேந்திரன் இறந்துவிடவில்லை என்பது விசாரணைகளின் போது கண்டறியப்பட்டுள்ளது என அவர் நாடாளுமன்றத்தில் நேற்றுத் தெரிவித்திருக்கின்றார்.

சாரா ஜாஸ்மின் தற்போது இந்தியாவில் இருப்பதற்கான எந்த அறிகுறியும் இல்லை என்றும் அவர் கூறினார். தேவைப்பட்டால், அவரைக் கைது செய்வதற்கான பிடிவிறாந்தை பெற அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் என்றும் அவர் மேலும் கூறினார்.

இந்த விசாரணையில் காத்திரமான முன்னேற்றம் எதனையும் காட்டாத அரசுத் தரப்பினர், தங்களின் இயலாமையை மூடி மறைப்பதற்காக இவ்விவகாரத்தில் அவ்வப்போது புதுப் புதுக் கதைகளை அவிழ்த்து விடுகின்றனர் என்றே தோன்றுகின்றது.



# மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரியின் கொழும்பு பழைய மாணவர் சங்கக் கூட்டம்

மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரியின் கொழும்பு பழைய மாணவர் சங்கத்தின் 77 ஆவது வருடாந்தப் பொதுக்கூட்டம் கடந்த 3 ஆம் திகதி கொழும்பு ரமடா ஹோட்டலில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தின் போது புதிய நிர்வாகக் குழு தெரிவு இடம்பெற்றது. அதன் தலைவராக மீண்டும் எஸ். சிவகுமார் தெரிவு செய்யப்பட்டார்.

தொடர்ச்சி▼

















# மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரியின் கொழும்பு பழைய மாணவர் சங்கக் கூட்டம்

**தொடர்ச்சி▼**

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக கிழக்குப் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் கலாநிதி எம். கோணேஸ்வரன் மற்றும் கல்லூரியின் அதிபர் ஏ.பி. யோசேப் ஆகியோரும், பழைய மாணவர் சங்கத்தின் அங்கத்தவர்களும் கலந்துகொண்டிருந்தனர்.

















# வவுனியாவில் சபரி மலை யாத்திரைக்கான விசேட வழிபாடு

(கி.வசந்தன்)

வவுனியா, திருநாவற்குளம் சபரீசன ஐயப்பன் மண்டபத்தில் தீபன் சாமி தலைமையிலான சபரிமலை வாசன் தீர்த்த யாத்திரை குழுவினர் சபரி மலை யாத்திரையை ஆரம்பித்திருந்தனர்.

இதன்போது மணி குருசாமியால் அந்த மண்டபத்தில் அமைந்துள்ள ஐயப்பனுக்கு விசேட பூஜைகள் மேற்கொள்ளப்பட்டன.

இவ்விசேட வழிபாட்டில் ஐயப்பன் சாமிகள், ஐயப்பன் அடியார்கள், பக்த அடியார்கள் என பலரும் கலந்து கொண்டனர்.













# நாயாற்று பாலத்தினூடான போக்குவரத்து வழமைக்கு!



(பா.சதீசன்)

முல்லைத்தீவு நாயாற்று பால வீதி புனரமைப்பு பணிகள் நிறைவு பெற்றுள்ள நிலையில் அந்தப் பாலத்தினூடான போக்குவரத்து நேற்றையதினம் வழமைக்கு திரும்பியுள்ளது.

டித்வா புயல் மற்றும் மழை வெள்ளத்தினால், முல்லைத்தீவு மாவட்டத்தில் முக்கிய பாலமாக காணப்படும் நாயாற்று பாலம் உடைந்து போக்குவரத்து தடைப்பட்ட நிலையில் பாலத்தின் திருத்தப்பணிகள் இடம்பெற்று வந்தன.

சேதமடைந்த இந்த இரண்டு பாலப் புனரமைப்புப் பணிகளில் இலங்கை இராணுவத்தின் பொறியில் பிரிவினரும் மற்றும் வீதி அபிவிருத்தி அதிகார சபையினரும் இணைந்து மேற்கொண்ட நிலையில் திருத்தப்பணிகள் நேற்றுடன் நிறைவடைந்தன. பாலம் ஊடான போக்குவரத்து நேற்றையதினமே வழமைக்குத் திரும்பியுள்ளது.





# கட்டைக்காட்டு வன்முறைச் சம்பவத்தில் சரணடைந்த 4 பேருக்கும் விளக்கமறியல்






(மரியசீலன் திலைக்ஸ்)

கட்டைக்காட்டில் இடம்பெற்ற வன்முறை சம்பவம் தொடர்பில் தேடப்பட்டு வந்த சந்தேக நபர்களில் நால்வர் சரணடைந்த நிலையில் அவர்கள் நேற்று கிளிநொச்சி நீதிமன்றத்தில் மருதங்கேணி பொலிசாரால் முற்படுத்தப்பட்டனர். நால்வரையும் எதிர்வரும் 14ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க கிளிநொச்சி நீதிவான் உத்தரவிட்டார்.

கடந்த வருடம் டிசெம்பர் மாதம் 21 ஆன் திகதி கட்டைக்காடு கிழக்குப் பகுதியில் அமைந்துள்ள வீடு ஒன்றின் மீது வன்முறைக் கும்பல் ஒன்று கொடூரமான தாக்குதலை மேற்கொண்டிருந்தது.

இதன்போது வீட்டில் நின்ற டிராக்டர், வீட்டின் உடைமைகள், சிசிடிவி கமரா ஆகிய பொருள்கள் பலத்த சேதமடைந்திருந்தன.

சம்பவம் தொடர்பாக மருதங்கேணி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. சந்தேக நபர்களைக் கைது செய்வதற்கு மருதங்கேணி பொலிஸார் பலமுறை முயற்சி செய்திருந்தார்கள்.

குற்றச்செயலில் தொடர்புடைய சந்தேக நபர்களைப் பொலிஸார் நீண்ட நாள்களாகத் தேடி வந்த நிலையில் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்று கருதப்படும் சந்தேக நபர்களில் நால்வர் நேற்று முன்தினம் மருதங்கேணி பொலிஸ் நிலையத்தில் தமது சட்டத்தரணி ஊடாகச் சரணடைந்தனர்.

அவர்களை நேற்றைய தினம் கிளிநொச்சி நீதிமன்றத்தில் முற்படுத்திய வேளை நால்வரையும் எதிர்வரும் 14 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டார். தலைமறைவாகி உள்ள ஏனைய சந்தேக நபர்களைக் கைது செய்து நீதிமன்றத்தில் முற்படுத்தவிம் பொலிசாருக்கு அவர் பணிப்புரை விடுத்தார்.




# நுவரெலியா கிரெகரி ஏரியில் நேற்று இறங்க முயன்ற சீ பிளேன் விபத்தில்

## காயமுற்ற இரு விமானிகளும் மருத்துவமனையில்

(உடப்பு க.மகாதேவன்)

நுவரெலியா, கிரெகரி ஏரியில் நேற்றுப் பிற்பகல் 12.30 மணியளவில் இறங்கத் தயாரான நீர் விமானம் (சீ பிளேன்) ஒன்று விபத்துக்குள்ளாகி வீழ்ந்துள்ளது.

, விமானம் விபத்துக்குள்ளானதில் அதிலிருந்த இரண்டு விமானிகள் காயமடைந்தனர். அவர்கள் நுவரெலியா மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

நுவரெலியாவிற்கு வருகை தந்துள்ள சுற்றுலாப் பயணிகள் குழுவொன்றை ஏற்றிச் செல்வதற்காக வந்தபோதே விமானம் இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

விமானத்தில் இருந்த இரண்டு விமானிகளையும், ஏரியில் படகுச் சவாரி செய்துகொண்டிருந்தவர்கள் மீட்டுள்ளனர்.






# போதைப் பொருள் வாங்குவதற்காக 14 வயது மகளின் வளையலைக் கேட்டு சிறுமியைத் தாக்கினாராம் தந்தை

## மட்டு மாவிலங்கு துறையில் சம்பவம்

(கனகராசா சரவணன்)

போதை பொருள் வாங்குவதற்கான பணம் தேவைக்காக 14 வயது சிறுமியான மகளின் கையில் இருந்த தங்க வளையலைக் கழற்றித் தருமாறு கேட்டுத் தந்தையார் அடித்துத் தாக்கியதில் சிறுமி காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். தந்தையைக் கைது செய்த பொலிஸார் பின்னர் அவரைக் கடுமையாக எச்சரித்து விடுவித்தனர்.

இந்தச் சம்பவம் கடந்த திங்கட்கிழமை 5 ஆம் திகதி காத்தான்குடி பொலிஸ் பிரிவிலுள்ள மாவிலங்குதுறை பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்

இது பற்றி தெரியவருவதாவது:-

அந்தொ பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவர் போதைப்பொருள் பாவனைக்கு அடிமையாகியுள்ள நிலையில் அதனை வாங்குவதற்கு பணம் இல்லாதமையால் 14 வயது சிறுமியான அவரது மகளின் கையில் இருந்த 3 பவுண் நிறை கொண்ட தங்க வளையலை கழற்றித் தருமாறு கோரியுள்ளார்.

சிறுமி அதனைக் கழற்றிக் கொடுக்காததையடுத்து சிறுமியை அடித்து தாக்கியதில் சிறுமி காயமடைந்தார். அவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். இது தொடர்பாக பொலிஸாருக்கு முறைப்பாடு செய்யப்பட்டது. அந்த நபரைப் பொலிஸார் கைது செய்யச் சென்ற போது அவர் பொலிஸாருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டார். எனினும் அவரைப் பொலிஸார் கைது செய்தனர்.

இதனை தொடர்ந்து பாதிக்கப்பட்ட சிறுமி தந்தைக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டாம் எனப் பொலிஸாரிடம் கோரியம்சியை அடுத்து கைது செய்தவரைப் பொலிஸார் எச்சரித்து விடுவித்தனர்.



# உத்தரவை மீறி மீண்டும் கட்டைக்காட்டுடனேயே சேவையை நிறுத்திக் கொள்ளும் அரச பஸ்கள்!

(மரியசீலன் திலைக்ஸ்)

வடமராட்சி கிழக்கில் சேவையில் ஈடுபடும் அரச பஸ்கள் கட்டைக்காட்டுடன் சேவையை நிறுத்துகின்றன என மீண்டும் குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்குப் பகுதியில் சேவையில் ஈடுபடும் பஸ்கள் கேவில் வரை செல்லாமல் கட்டைக் காடுடன்சேவையைநிறுத்துவதால்கேவில், நித்தியவெட்டை மற்றும் வைத்திய சாலைக்குச் செல்லும் மக்களும் பாட சாலை மாணவர்களும் பாதிக்கப்படு கின்றனர் எனஜ் குற்றச்சாட்டு முன் வைக்கப்பட்டது

வடமராட்சி கிழக்குப் பிரதேச ஒருங் கிணைப்புக் குழுத் தலைவராக கடந்த வருடம் சேவையாற்றிய நாடாளு மன்ற உறுப்பினர் இளங்குமரன் ஒருங்கி ணைப்புக்குழுக் கூட்டத்தில் வடம ராட்சி கிழக்கில் சேவையில் ஈடுபடும் பஸ்கள் கேவில் வரை செல்லவேண்டு மென அறிவுறுத்தினார்.

ஆனால் ஒரு சில நாஸ்கள் பஸ் கள் கேவில் வரை சேவையில் ஈடு பட்ட. விட்டு பின்பு இடை நிறுத்தி விட் டன எனக் கடந்த ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் ஒருங்கிணைப்புக்குழு தலைவர் ரஜீவன் எம்.பியிடம் மக்களால் முறைப்பாடு அளிக்கப்பட்டது.

இதனடிப்படையில் வடமராட்சி கிழக் கில் சேவையில் ஈடுபடும் பஸ்களை கேவில் வரை செல்லுமாறு பணிக்கப் பட்டது. ஆனால் உத்தரவை கடைப் பிடிக்காமல் ஒரு சில பஸ்கள் மீண்டும் கட்டைக்காட்டுடன் தமது சேவையை இடை நிறுத்திக் கொள்வதை அவ தானிக்க முடிகின்றது.

# ஐஸ், ஹெரோயின் போதைப்பொருள் வியாபாரிகளான சிவில் பாதுகாப்பு அலுவலர் உட்பட இரண்டு பேர் கைது

## அம்பாறை நகரில் நேற்றுமுன்தினம் இரவு சம்பவம்

(கனகராசா சரவணன்)



அம்பாறை நகரத்திற்கு உகணையில் இருந்து போதைப்பொருளை நீண்ட காலமாகக் கடத்தி வந்து வியாபாரத் தில் ஈடுபட்ட சிவில் பாதுகாப்பு உத்தியோ கத்தர் உட்பட இருவரை ஐஸ் மற்றும் ஹெரோயின் போதை பொருளுடன் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நகரத்தில் வைத்துத் தாங்கள் கைது செய்துள்ளனர் என அம்பாறை தலை மையகப் பொலிஸார் தெரிவித்தனர்.

அந்தொ பொலிஸ் நிலையத்தின் ஊழல் தடுப்புப் பிரிவுக்குக் கிடைத்த தகவல் ஒன்றௌயடுத்து கிழக்கு மாகாண சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் சட்டத்தரணி வருண ஜயசுந் தரவின் ஆலோசனையில் மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபர் சுஜித் வேத முல்லவின் தலைமையில் பொலிஸ் அத்தியட்சகர் பிரியந்த பண்டார வின் ஒருங்கிணைப்பில் உதவி பொலிஸ் அத்தியட்சகர் மேற்பார்வை யில் அம்பாறை தலைமையக பொலிஸ்நிலையபொறுப்பதிகாரிஅசேல கே. ஹேரத் தலைமையிலான பொலிஸ் குழுவினர் நேற்று முன்தினம் இரவு 10.00 மணிக்கு அம்பாறை நகர்ப் பகுதியில் கண்காணிப்பில் ஈடுபட்டு வந்தனர்.

அப்போது உகண திஸ்ஸபுர கிரா மத்தில் இருந்து அம்பாறை நகருக்கு போதைப் பொருளை எடுத்துக் கொண்டு சென்ற ஒரு வியாபாரியை டி.எஸ். சேனநாயக்க சந்திப்பில் வைத்து 2101 மில்லிகிராம் ஹெரோயின் போதை பொருளுடன் பொலிஸார் கைது செய் தனர். அவரிடம் விசாரணைகளை மேற்கொண்டனர்.

இதன் போது அவர் வழங்கிய தகவலின் அடிப்படையில் அம்பாறை பாலிகா சந்தியில் வைத்து சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தரான வியா பாரியை 8757 மில்லிகிராம் ஐஸ் போதைப் பொருளுடன் பொலிஸார் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட இருவரும் நீண்ட காலமாகப் போதைப்பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டு வந்துள்ள னர் என்பது பொலிஸாரின் ஆரம்பக் கட்ட விசாரணையில் தெரியவந்துள் ளது.

கைது செய்யப்பட்ட இருவரையும் விசாரணையின் பின்னர் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ள தாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

# கேப்பாப்புலவு காணி விடுவிப்புக் குறித்து இராணுவம் உண்மைக்கு மாறாக தகவல்களை வெளியிடுகின்றது

## அமைச்சுக் கூட்டத்தில் ஜனாதிபதிக்கு எடுத்துரைத்த ரவிகரன்



**(கி.வசந்தன்)**

முல்லைத்தீவு – கேப்பாப்புலவில் தமிழ் மக்களுக்குரிய காணிகள் விடுவிக்கப்பட்டுள்ளன எனவும், விடுவிக்கப்படாத காணிகளுக்கு பதிலீட்டுக் காணிகள் வழங்கப்பட்டமையுடன், வீடுகளும் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன எனவும் இராணுவ அதிகாரிகளால் ஜனாதிபதியிடம் உண்மைக்கு மாறான தகவல்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன எனக் கூறப்படுகின்றது.

இந்நிலையில் இராணுவத்தின் இந்தத் தகவலுக்கு எதிர்ப்புத் தெரிவித்த வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், கேப்பாப்புலவில் 55பேருக்குரிய 59.5ஏக்கர் காணிகளும், 4பேருக்குரிய 100ஏக்கர் மத்திய வகுப்புக் காணிகளுமாக மொத்தம் 59 பேருக்குரிய 159.5ஏக்கர் காணிகளை இராணுவத்தினரால் விடுவிக்கப்படவேண்டியுள்ளன என ஜனாதிபதியிடம் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாடாளுமன்றக் கட்டடத்தொகுதியில் நேற்று பாதுகாப்பு அமைச்சின் அமைச்சுசார் ஆலோசனைக் குழுக் கூட்டம் ஜனாதிபதி மற்றும் பாதுகாப்பு அமைச்சர் அநுரகுமார திஸநாயக்க தலைமையில் இடம்பெற்றது. இதன்போதே நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் மேற்கண்டவாறு ஜனாதிபதியிடம் சுட்டிக்காட்டியுள்ளார்.

குறித்த விடயம் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில் கூறியவை வருமாறு:–

நாடாளுமன்றில் பாதுகாப்பு அமைச்சின் அமைச்சுசார் ஆலோசனைக் குழுக்கூட்டம் மாலை 04.00மணியளவில் நாடாளுமன்றக் கட்டடத்தொகுதியில் இடம்பெற்றது.

இக்கூட்டத்தில் ஜனாதிபதி மற்றும் பாதுகாப்பு அமைச்சர் அநுர குமார திஸநாயக்க, பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அருண ஜயசேகர, பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜயபால, நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்டவர்கள் வருகை தந்திருந்தனர். அத்தோடு பாதுகாப்பு அமைச்சின் அதிகாரிகள், முப்படைகளின் தளபதிகள், அதிகாரிகளும் பங்குபற்றினர்.

முல்லைத்தீவு கேப்பாப்புலவில் இராணுவத்தினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள காணி விடுவிப்புத் தொடர்பிலும் பேசப்பட்டது.

கேப்பாப்புலவு காணி விடுவிப்பு விடயத்தில் 44 பேருக்குத்தான் காணிகள் விடுவிக்கப்பட வேண்டியிருந்தன எனவும், அதில் பெரும்பாலானவர்களின் காணிகள் விடுவிப்புச் செய்யப்பட்டுவிட்டன எனவும், இன்னும் குறிப்பிட்டளவானவர்களுக்கே காணிகள் விடுவிக்க வேண்டியுள்ளன எனவும் கூட்டத்தில் கலந்துகொண்டிருந்த சில அதிகாரிகளால் உண்மைக்குப்புறம்பான தகவல்கள் வழங்கப்பட்டுக்கொண்டிருந்தன.

இந்நிலையில் குறுக்கீடு செய்து அதிகாரிகளால் வழங்கப்படுகின்ற தகவல்கள் தவறானவை என்பதை ஜனாதிபதியின் கவனத்திற்குக் கொண்டுவந்திருந்தேன்.

கேப்பாப்பிலவில் ஏற்கனவே இராணுவத்தினரால் அபகரிக்கப்பட்டிருந்த மக்களின் காணிகள் விடுவிக்கப்பட்டிருக்கின்றன. எனினும் 55 பேருக்குரிய 59.5ஏக்கர் காணிகளும், 4 பேருக்குரிய 100ஏக்கர் மத்திய வகுப்புக் காணிகளும் இராணுவத்தினரால் இன்னும் விடுவிக்கப்படவேண்டியுள்ளன என்பதை இதன்போது சுட்டிக்காட்டினேன்.

இதன்போது இராணுவத்தின் கட்டுப்பாட்டிலுள்ள காணிகளுக்குப் பதிலாக பதிலீட்டுக்காணிகள் மக்களுக்கு வழங்கப்பட்டமையுடன், வீடுகளும் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன எனத் தொடர்ந்தும் இராணுவத்தினரால் உண்மைக்குப் புறம்பான கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன.

இந்நிலையில் இராணுவத்தினர் தொடர்ந்தும் பிழையான தகவல்களை வழங்கிக் கொண்டிருக்கின்றனர் என்பதை ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டுவந்தேன். அத்தோடு மக்களுக்கு பதிலீட்டுக் காணிகள் வழங்கப்படவில்லை. சீனியாமோட்டை என்னுமிடத்தில் சிறிய காணித் துண்டுகளில் தற்காலிகமாக வீடுகள் அமைத்து கேப்பாப்புலவு மக்கள் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என்ற விடயத்தையும் ஜனாதிபதியிடம் தெளிவுபடுத்தினேன். அதேவேளை முறையற்ற விதத்திலேயே மக்களுக்கு அங்கு வீடுகள் அமைக்கப்பட்டு கேப்பாப்புலவு மக்கள் தற்காலிகமாக அங்கு தங்கவைக்கப்பட்டுள்ளனர் என்பதையும் இதன்போது சுட்டிக்காட்டினேன்.

எதிர்காலத்தில் இராணுவத்தினர் காணிகளை விடுவித்த பிற்பாடு சொந்த இடங்களில் மீள்குடியமர்த்தப்படுவீர்கள், அதுவரை சீனியாமோட்டைப்பகுதியில் தற்காலிகமாகவே குடியேற்றப்படுகின்றீர்கள் என்ற அரச அதிகாரிகளின் வாக்குறுதிக்கமையவே மக்கள் அங்கு தற்காலிகமாக குடியேறித் தங்கியுள்ளனர் என்ற விடயத்தையும் இதன்போது வெளிப்படுத்தியிருந்தேன்.

இந்நிலையில் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டிலுள்ள தமது பூர்வீகக் காணிகள் விடுவிக்கப்படுமென்ற நம்பிக்கையுடனேயே கேப்பாப்புலவு மக்கள் எதிர்பார்த்துக் காத்திருக்கின்றனர் என்பதையுன் இதன்போது ஜனாதிபதியிடம் சுட்டிக்காட்டியிருந்தேன்.

இந்த கேப்பாப்புலவு காணிவிடுவிப்பு தொடர்பான உண்மையான விவரங்களை முல்லைத்தீவு மாவட்ட செயலரிடமிருந்தும், கரைதுறைப்பற்று பிரதேசசெயலரிடமிருந்தும் பெற்றுக்கொள்ள முடியுமெனவும் இதன்போது ஜனாதிபதியிடம் தெரிவித்திருந்தேன்.

இந்நிலையில் இராணுவத்தளபதியிடம் குறித்த கேப்பாப்புலவு காணி விடுவிப்பு விடயம் தொடர்பான ஓர் அறிக்கையைத் தமக்கு தருமாறு ஜனாதிபதி கோரியிருந்தார்.

இதுதொடர்பில் ஙனும் முல்லைத்தீவு மாவட்டசெயலாளருடனும், கரைதுறைப்பற்று பிரதேசசெயலருடனும் கலந்துரையாடி உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வேன் – என்றார்.

# எம்.பிக்களின் ஓய்வூதியம் இரத்து; சட்டமூலம் சபையில் சமர்ப்பிப்பு



நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான ஓய்வூதிய முறையை முழுமையாக இரத்து செய்வதற்கான சட்டமூலம் நேற்று நாடாளுமன்றத்தில் அதன் முதலாம் வாசிப்புக்காக சமர்ப்பிக்கப்பட்டது.

இந்தச் சட்டமூலம் நிறைவேற்றப்பட்டு சட்டமாக மாறியதும், எந்தவொரு தனிநபரும் நாடாளுமன்ற உறுப்பினர் என்ற அடிப்படையில் ஓய்வூதியம் பெறுவதற்கு தகுதியற்றவர் என நீதியமைச்சரும் சட்டத்தரணியுமான ஹர்ஷன நாணயக்கார தெரிவித்தார்.

மேலும், புதிய சட்டம் நடைமுறைக்கு வருவதற்கு முன்னர் ஏற்கனவே ஓய்வூதியம் பெற்றுக்கொண்டிருப்பவர்களுக்கு இந்த மாற்றம் பாதிப்பை ஏற்படுத்தாது எனவும் அவர் தெரிவித்தார்.

அத்தோடு, சாதாரண அரச ஊழியர்கள் நீண்டகாலம் சேவையாற்றி, பங்களிப்புகளை வழங்கிய பின்னரே ஓய்வூதியம் பெறுகின்றனர்.

ஆனால், நாடாளுமன்ற உறுப்பினர்கள் குறுகிய கால சேவையின் பின்னர் எவ்வித பங்களிப்புமின்றி ஓய்வூதியம் பெறுவதற்கு எதிராக பொதுமக்களிடையே பெரும் எதிர்ப்பு நிலவியது.

இந்தநிலையில், தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் கொள்கை பிரகடனத்தில் குறிப்பிட்டவாறு, சலுகைகளை அடிப்படையாகக் கொண்ட அரசியல் கலாசாரத்தை ஒழிக்கும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும், இந்தச் சீர்திருத்தமானது நாட்டின் அரசியல் வரலாற்றில் ஒரு முக்கிய மாற்றமாகப் பார்க்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

# 16 ஆம் திகதி விடைபெறுகிறார் அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங்



இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவராக சுமார் நான்கு ஆண்டுகள் பணியாற்றிய ஜூலி சங், எதிர்வரும் 16 ஆம் திகதி தனது பதவியிலிருந்து விடைபெற்று இலங்கையிலிருந்து புறப்படவுள்ளார்.

2022ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் இலங்கைக்கான தூதுவராகப் பொறுப்பேற்ற அவர், இலங்கையின் மிகவும் நெருக்கடியான காலகட்டங்களில் அமெரிக்காவுடனான உறவை வலுப்படுத்துவதில் முக்கிய பங்காற்றினார்.

தனது பிரியாவிடை செய்தியில், தனது பணிக் காலத்தின் முதல் நாளிலிருந்தே அமெரிக்காவின் நலன்களை மேம்படுத்துவதும், அமெரிக்க மக்களுக்குப் பயனுள்ள உறவைக் கட்டியெழுப்புவதுமே தனது பிரதான நோக்கமாக இருந்ததாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

சுதந்திரமான, திறந்த மற்றும் பாதுகாப்பான இந்தோ-பசிபிக் பிராந்தியத்தை உறுதிப்படுத்துவதற்காக இலங்கையுடன் நெருக்கமாகப் பணியாற்ற முடிந்ததாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கையின் பொருளாதார நெருக்கடி மற்றும் அரசியல் மாற்றங்களின் போது ஜூலி சங் ஆற்றிய பணிகள் குறிப்பிடத்தக்கவை. குறிப்பாக, இரு நாடுகளுக்கும் இடையிலான இராஜதந்திர மற்றும் பொருளாதார உறவுகளில் பல மைல்கற்களை அவர் தனது பணிக் காலத்தில் எட்டியுள்ளார்.

# கொழும்பு பங்குச் சந்தையின் வர்த்தக நடவடிக்கை நிறுத்தம்



கொழும்பு பங்குச் சந்தையின் நேற்றைய வர்த்தக நடவடிக்கைகள் ஆரம்பமான சில நிமிடங்களிலேயே இடைநிறுத்தப்பட்டுள்ளன.

நிறுவனமொன்றின் பங்குகளில் ஏற்பட்ட அசாதாரண ஆரம்ப விலை இதற்கு முக்கிய காரணமாகும் என கொழும்பு பங்குச் சந்தை தெரிவித்துள்ளது.

பங்குச் சந்தை விதிமுறைகளின்படி, குறிப்பிட்ட நிறுவனத்தின் பங்குகளில் வழக்கத்திற்கு மாறான விலை மாற்றங்கள் அவதானிக்கப்பட்டதால், சந்தையின் ஸ்திரத்தன்மையைப் பேண இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த நிறுவனத்தின் பங்கு விலையில் ஏற்பட்ட திடீர் மற்றும் எதிர்பாராத மாற்றங்கள் சந்தைக் கண்காணிப்பு அமைப்பால் கண்டறியப்பட்டுள்ளன.

இந்த விலை மாற்றம் குறித்த தொழில்நுட்ப மற்றும் ஒழுங்குமுறை ஆய்வுகள் முடிந்த பின்னர், வர்த்தகம் மீண்டும் தொடங்கும் நேரம் குறித்து அறிவிக்கப்படும் என பங்குச் சந்தை தகவல்கள் தெரிவிக்கின்றன.

சந்தையில் இவ்வாறான அசாதாரண விலையேற்றம் அல்லது வீழ்ச்சி ஏற்படும் போது, முதலீட்டாளர்களின் நலனைக் கருத்திற்கொண்டு தற்காலிக நிறுத்த முறையை பங்குச் சந்தை நிர்வாகம் பயன்படுத்துவது வழமையாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

# புதிய அரசமைப்பு உருவாக்கப்படும் போது தமிழ் தரப்புகளையும் இணைக்க வேண்டும்

## செல்வம் அடைக்கலநாதன் கோரிக்கை

புதிய அரசமைப்பு உருவாக்க தயாரிப்பில் தமிழ் மக்களையும் இணைத்துக் கொள்ள வேண்டும் என ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் வலியுறுத்தினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற கொழும்பு துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழு (திருத்தச்) சட்டமூலம் மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் மேலும் தெரிவிக்கையில்,

“மாகாண சபைகள் தேர்தலை எந்த முறையில் நடத்துவது என்பது தொடர்பில் ஆராயும் குழுவை நியமிக்கும் யோசனையை அரசாங்கம் முன்வைத்துள்ளது. ஒவ்வொரு அரசாங்கங்களும் ஒவ்வொரு பிரச்சினைகளுக்கும் இதுபோன்ற குழுவை அமைப்பது வழக்கமானது. இவ்வாறான குழுக்களின் ஊடாக அறிக்கைகளை சமர்ப்பிக்கப்படுவதானது காலத்தை கடத்தும் செயற்பாடாகவே இருக்கும். கடந்த கால வரலாறுகளில் இதனை பார்த்துள்ளோம்.

அரசாங்கம் மாகாண சபைகள் தேர்தலை நடத்தும் முறை தொடர்பில் ஆராய்வதற்காக குழுவை நியமிக்க அனுமதியளித்துள்ளது. இது எங்களுக்கு சந்தேகங்களை ஏற்படுத்தியுள்ளது. அதாவது மாகாண சபைகள் தேர்தலை காலம் கடத்துகின்ற நிலைப்பாட்டை அரசாங்கம் கொண்டுள்ளதா என்ற சந்தேகத்தையே ஏற்படுத்துகின்றது. அமைச்சர்களும் அரசாங்கமும் மாகாண சபைகள் தேர்தலை நடத்துவோம் என்ற கூறிவந்த நிலையில் தற்போது அமைக்கப்படும் குழுவானது அந்தத் தேர்தலை காலம் கடத்துவதற்கானதா என்ற கேள்விகள் எழுகின்றது.



எவ்வாறாயினும் உடனடியாக பழைய முறையில் தேர்தலை நடத்தி அதன் பின்னர் என்ன செய்ய வேண்டும் என்று ஆராய வேண்டுமே தவிர, தேர்தலை பின்போடுவதற்கான யுக்தியாக இவ்வாறான குழுக்களை அமைக்கும் செயற்பாடுகளை முன்னெடுத்து காலம் கடத்தும் வகையில் செயற்பட வேண்டாம் என்று கோருகின்றேன்.

இப்போது மாகாண சபைகள் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்ற கால கட்டத்திலேயே இருக்கின்றோம். இதனால் உடனடியாக தேர்தலை நடத்த முயற்சிகளை எடுக்க வேண்டும். இதனை விடுத்து குழுக்களை அமைத்து காலத்தை கடத்தி, அதனை அப்படியே கைவிடக்கூடாது. புதிய அரசமைப்பு உருவாக்கப்படவுள்ள நிலையில் இந்த மாகாண சபைகள் முறைமைகள் இல்லாமல் செய்யப்படப் போகின்றதா? என்ற கேள்வியையும் எழுப்புகின்றேன்.

புதிய அரசமைப்பு உருவாக்கப்படும் போது தமிழ் தரப்புகளையும் இணைத்து, தமிழ் மக்கள் விரும்புகின்ற வகையில் அதனை உருவாக்க வாய்ப்பை அரசாங்கம் செய்ய வேண்டும். இதுவே ஜனநாயக மற்றும் நேர்மைத் தன்மையாக இருக்கும். அத்துடன் மாகாண சபைகள் தேர்தலை பின்போடும் யுக்திகளை அரசாங்கம் கையாளக்கூடாது என்று கேட்டுக்கொள்கின்றேன்.““ – என்றார்.

# சாரதி அனுமதிப்பத்திர விநியோகம் பாதிப்பு




மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் அம்பாந்தோட்டை மாவட்ட அலுவலகத்தில் முன்னெடுக்கப்படும் தினசரி சாரதி அனுமதிப்பத்திர விநியோக நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளது.

மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகம் இதனை உறுதிப்படுத்தியுள்ளார்.

அம்பாந்தோட்டை நிர்வாக வளாகத்தில் ஏற்பட்ட தொலைபேசி இணைப்பு கோளாறு காரணமாக இந்த தடை ஏற்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட தொலைபேசி இணைப்புகளை சீரமைக்கும் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன.

சீரமைப்பு பணிகள் நிறைவடைந்தவுடன், நிகழ்நிலை மூலமான சாரதி அனுமதிப்பத்திர விநியோக நடைமுறை உடனடியாக மீள ஆரம்பிக்கப்படும் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சேவைகள் வழமைக்குத் திரும்பும் வரை பொதுமக்கள் பொறுமையுடன் இருக்குமாறு மோட்டார் போக்குவரத்து திணைக்களம் கேட்டுக்கொண்டுள்ளது.



# ஜேர்மனி - இலங்கை இடையே கடன் மறுசீரமைப்பு ஒப்பந்தம்

ஜேர்மனி மற்றும் இலங்கை அரசாங்கங்களுக்கு இடையே கடன் மறுசீரமைப்பு செயன்முறை தொடர்பான இருதரப்பு ஒப்பந்தம் கைச்சாத்திடப் பட்டுள்ளது.

வெளிநாட்டு கடன் மறுசீரமைப்பு செய்யும் செயற்பாட்டில் இது முக்கிய மைல்கல்லாக அமைவதாக நிதி, திட்ட மிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடன் வழங்குநர் குழுவுடனான புரிந்துணர்வு ஒப்பந்தம் மற்றும் இரு தரப்பு கலந்துரையாடல்களில் நிலுவை யிலுள்ள கடனை மறுசீரமைப்பதன் மூலம் கடன் நிவாரணம் வழங்க ஜெர் மனி அரசாங்கம் இணக்கம் தெரி வித்துள்ளது.

இருதரப்பு ஒப்பந்தத்தின் கீழ் மறுசீரமைக்கப்பட்ட கடன் தொகை 188 மில்லியன் யூரோக்கள் என மதிப்பிடப் பட்டுள்ளது.

இந்த ஒப்பந்தம் ஜேர்மனி – இலங்கை இடையிலான வலுவான மற்றும் நீண்ட கால இருதரப்பு உறவு களை மேலும் மேம்படுத்த உதவும் என நிதி, திட்டமிடல் மற்றும் பொருளா தார அபிவிருத்தி அமைச்சு தெரிவித் துள்ளது.

# தரம் 06 ஆங்கிலப் பாடத்திற்கான சர்ச்சைக்குரிய பாட அலகு நீக்கம்



தரம் 06 ஆங்கிலப் பாடத்திற்கான மொடியூலில் உள்ளடக்கப்பட்டுள்ள சர்ச்சைக்குரிய பாட அலகை நீக்குவ தற்கு தேசிய கல்வி நிறுவகம் தீர்மானித் துள்ளதாக பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

நாடாளுமன்றில் உரையாற்றும் போதே பிரதமர் இதனை கூறினார்.

விடயம் தொடர்பான விசார ணைகளை முன்னெடுப்பதற்காக கல்வியமைச்சின் முன்னாள் செயலாளர் ரஞ்சித் ஆரியரத்ன தலைமையிலான குழுவை நியமிப்பதற்கு தேசிய கல்வி நிறுவகத்தின் நிர்வாக சபை தீர்மானித் துள்ளதாக பிரதமர் குறிப்பிட்டார்.

சர்ச்சைக்குரிய தரம் 06 ஆங்கில பாடத்திற்கான மொடியூலை இரத்து செய்துள்ளதாக பிரதமர் மேலும் தெரி வித்தார். எனவே அந்த மொடியூலில் உள்ளடக்கப்பட்டிருந்த பொருத்தமற்ற வலைத்தள முகவரி தொடர்பில் தேவை யற்ற பிரசாரங்களை தவிர்க்குமாறும் பிரதமர், எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் கோரியுள்ளார்.



# அ.தி.மு.க. கூட்டணியில் இணைந்த பா.ம.க: பழனிசாமி, அன்புமணி கூட்டாக அறிவிப்பு

தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் விரைவில் நடைபெறவுள்ள நிலையில், அ.தி.மு.க. கூட்டணியில் பா.ம.க. இணைந்துள்ளது.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலுக்காக அ.தி.மு.க. கூட்டணியை பலப்படுத்தும் முயற்சியில் இ.பி.எஸ். தீவிரமாக ஈடுபட்டுள்ளார். அந்த வகையில் பா.ம.கவுடனான கூட்டணி குறித்தும் அ.தி.மு.க. பரிசீலித்து வந்தது.

இந்நிலையில், நேற்று காலை சென்னை பசுமைவழிச் சாலையில் உள்ள அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி இல்லத்துக்கு பா.ம.க. தலைவர் அன்புமணி ராமதாஸ் சென்றார்.

இந்த சந்திப்புக்குப் பின்னர் அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமியும், பா.ம.க. தலைவர் அன்புமணியும் கூட்டாக செய்தியாளர்களை சந்தித்தனர்.

அப்போது எடப்பாடி பழனிசாமி கருத்து தெரிவிக்கையில்,

"ஏற்கெனவே அ.தி.மு.க. - பா.ஜ.க. கூட்டணி உறுதியாகிவிட்டது. இந்நிலையில் இந்தக் கூட்டணியில் பா.ம.க. இணைந்துள்ளது. இது இயற்கையான கூட்டணி. இந்தக் கூட்டணி அ.தி.மு.க. - பா.ம.க. கட்சியினர், தொண்டர்கள் விரும்பியவாறு அமைந்துள்ளது. இது வெற்றிக் கூட்டணி.

வரவிருக்கும் சட்டப்பேரவைத் தேர்தலில் மக்கள் விரோத தி.மு.க. ஆட்சியை அகற்ற வேண்டும் என்ற லட்சியத்தின் அடிப்படையில் ஒரு வலிமையான தமிழகத்தை உருவாக்க, மக்களுக்கு தேவையான திட்டத்தை கொடுக்கும் அரசு அமைய எங்களது கூட்டணி 234 தொகுதிகளிலும் பெரும்பாலான இடங்களில் வெற்றி பெற்று, அ.தி.மு.க. தனிப் பெரும்பான்மையுடன் ஆட்சி அமைக்கும்.

அ.தி.மு.க, பா.ஜ.க, பா.ம.க. ஆகிய 3 கட்சிகளும் இணைந்து இரவு, பகல் பார்க்காமல் சுறுசுறுப்பாக செயல்பட்டு, மிகப்பெரிய வெற்றிபெறும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். தொகுதிகள் எண்ணிக்கை முடிவு செய்துவிட்டோம். மற்றவை பின்னர் அறிவிக்கப்படும்." என்று தெரிவித்தார்.

இருப்பினும், பா.ம.கவுக்கு 20 சட்டப்பேரவைத் தொகுதிகளையும், ஒரு மாநிலங்களவை உறுப்பினர் பதவியையும் ஒதுக்க அ.தி.மு.க. முன்வந்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. தொடர்ந்து அன்புமணி கருத்து தெரிவிக்கையில்,

"வரும் சட்டப்பேரவை தேர்தலை அ.தி.மு.க. தலைமையிலான கூட்டணியில் இருந்து சந்திக்கும் வகையில் இணைந்திருக்கிறோம். இது, எங்களுக்கு மகிழ்ச்சியான தருணம். எங்கள் தொண்டர்கள் எதிர்பார்த்த கூட்டணியில் நாங்கள் சேர்ந்து இருக்கிறோம். இது வலுவான கூட்டணி.

எங்களது நோக்கம் மக்கள் விரோத, ஊழல் செய்கிற, பெண்களுக்கு எதிரான, சமூக நீதிக்கு எதிரான தி.மு.க. ஆட்சியை அகற்ற வேண்டும் என்பதே. மிகப்பெரிய வெற்றியை நாங்கள் பார்த்து இருக்கிறோம்.

சமீபத்தில் 100 நாள்கள் நடைபயணம் மேற்கொண்டபோது கிராமப்புற மக்கள் தி.மு.க. மீது மிகுந்த கோபத்தில் இருப்பதை பார்த்தோம். தேர்தல் எப்போது வரும் என்று அவர்கள் காத்துக் கொண்டு இருக்கிறார்கள். உறுதியாக எங்களது கூட்டணி மிகப் பெரிய வெற்றி பெறும்." - என்றார்,

# ‘ஜனநாயகன்’ திரைப்பட வெளியீடு திகதி குறிப்பிடாமல் தள்ளிவைப்பு

## படக்குழு அதிகாரபூர்வ அறிவிப்பு

விஜய் நடித்துள்ள ஜனநாயகன் திரைப்படத்தின் வெளியீட்டுத் திகதி தள்ளிவைக்கப்படுவதாக படக்குழு அதிகாரபூர்வ அறிவித்துள்ளது.

இதுகுறித்து கே.வி.என். நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

"எங்களது மதிப்புமிக்க பங்குதாரர்கள் மற்றும் பார்வையாளர்களுடன் இந்தத் தகவலை மிகுந்த வருத்தத்துடன் பகிர்ந்து கொள்கிறோம். ஜனவரி 9 ஆம் திகதி ஆவலுடன் எதிர்பார்க்கப்பட்ட 'ஜனநாயகன்' படத்தின் வெளியீடு, எங்களது கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட தவிர்க்க



முடியாத சூழ்நிலைகளால் தள்ளி வைக்கப்பட்டுள்ளது.

இந்தப் படம் குறித்த எதிர்பார்ப்பு, உற்சாகம் மற்றும் உணர்வுகளை நாங்கள் ஆழமாகப் புரிந்துகொள்கிறோம், மேலும் இந்த முடிவு எங்கள் யாருக்கும் எளிதானதாக இல்லை. புதிய வெளியீட்டுத் திகதி விரைவில் அறிவிக்கப்படும்.

அதுவரை, உங்கள் பொறுமையையும் அன்பையும் தொடர்ந்து வழங்குமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கிறோம். உங்களது அசைக்க முடியாத ஆதரவே எங்களது மிகப் பெரிய பலம் மற்றும் ஒட்டுமொத்த 'ஜனநாயகன்' குழுவினருக்கும் அதுவே எல்லாமும் ஆகும்." என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கிரீன்லாந்தை அமெரிக்கா கைப்பற்றினால் நேட்டோ நாடுகள் உடைந்து சிதறும் நிலை

## டென்மார்க் பிரதமர் எச்சரிக்கை



கிரீன்லாந்தை அமெரிக்கா கைப்பற்றினால் நேட்டோ கூட்டமைப்பு உடைந்து சிதறும் என்று டென்மார்க் பிரதமர் மெட்டே பிரடெரிக்சன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

ஐரோப்பிய நாடான டென்மார்க்கின் கட்டுப்பாட்டின் கீழ் தன்னாட்சி பெற்ற பகுதியாக கிரீன்லாந்து செயல்படுகிறது. இது உலகின் மிகப்பெரிய தீவு ஆகும். பாதுகாப்பு காரணங்களுக்காக இந்த தீவு அமெரிக்காவுடன் இணைக்கப்படும் என்று ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அண்மையில் தெரிவித்தார்.

இதுகுறித்து டென்மார்க் பிரதமர் மெட்டே பிரடெரிக்சன் கருத்து தெரிவிக்கையில்,

"இரண்டாம் உலகப் போருக்கு பிறகு நேட்டோ கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது. இந்த அமைப்பில் அமெரிக்காவும் டென்மார்க்கும் இடம் பெற்றுள்ளன. நேட்டோ கூட்டமைப்பின் ஒப்பந்தத்தின்படி உறுப்பு நாடுகள் ஒருவர் மீது ஒருவர் தாக்குதல் நடத்தக்கூடாது. ஏதாவது ஓர் உறுப்பினருக்கு ஆபத்து என்றால் ஒட்டு மொத்த நேட்டோ நாடுகளும் களமிறங்கும்.

தற்போது டென்மார்க்கின் கட்டுப்பாட்டில் உள்ள கிரீன்லாந்து தீவு அமெரிக்காவுக்கு தேவை என்று ட்ரம்ப் கூறுகிறார். இது நேட்டோ கூட்டமைப்பு ஒப்பந்தத்துக்கு எதிரானது. இதை ஒருபோதும் ஏற்க மாட்டோம். வெனிசுலா நாட்டுடன் கிரீன்லாந்தை ஒப்பிட முடியாது. ஒரு வேளை, கிரீன்லாந்தை அமெரிக்கா கைப்பற்றினால் நேட்டோ கூட்டமைப்பு உடைந்து சிதறும்." என்று தெரிவித்தார்.





# கிரீன்லாந்தை கையகப்படுத்துவதற் இராணுவத்தை பயன்படுத்த தயார்

## வெள்ளை மாளிகை எச்சரிக்கை!

கிரீன்லாந்தை கையகப்படுத்துவதற்கான பல்வேறு விருப்பங்கள் குறித்து அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் விவாதித்து வருவதாகவும், அதில் இராணுவத்தைப் பயன்படுத்துவதும் அடங்கும் என்றும் வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது.

முன்னதாக, கிரீன்லாந்து தீவை அமெரிக்காவுடன் இணைக்கும் விவகாரத்தில், அதன் நேட்டோ நட்பு நாடான டென்மார்க் மீது இராணுவ நடவடிக்கை எடுக்க முயன்றால், அது 80 ஆண்டுகால சர்வதேச பாதுகாப்பு கட்டமைப்பின் முடிவாக அமையும் என டென்மார்க் பிரதமர் மெட்டே பிரடெரிக்சன் எச்சரித்துள்ளார்.

வெனிசுலாவில் நடத்தப்பட்ட இராணுவ நடவடிக்கையைத் தொடர்ந்து, ஆர்க்டிக் பகுதியில் அமைந்துள்ள கனிம வளம் மிக்க கிரீன்லாந்து தீவை அமெரிக்காவுடன் இணைக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தீவிரம் காட்டி வருகிறார்.

இந்தநிலையில், அமெரிக்காவின் இந்த மிரட்டலுக்கு எதிராக பிரித்தானியா, பிரான்ஸ், ஜேர்மனி, இத்தாலி, போலந்து மற்றும் ஸ்பெயின் ஆகிய நாடுகளின் தலைவர்கள் டென்மார்க்குடன் இணைந்து கூட்டறிக்கை ஒன்றை வெளியிட்டனர்.

அதில் "கிரீன்லாந்து அதன் மக்களுக்கே சொந்தமானது"; கிரீன்லாந்தின் எதிர்காலத்தை டென்மார்க்கும் கிரீன்லாந்தும் மட்டுமே தீர்மானிக்க முடியும்.

ஐக்கிய நாடுகள் சபையின் சாசனத்தின்படி, ஒரு நாட்டின் எல்லைகளையும் இறையாண்மையையும் வலுக்கட்டாயமாக மாற்ற முடியாது" என அந்த அறிக்கை வலியுறுத்தியுள்ளது.

அதேநேரம், கிரீன்லாந்து பிரதமர் ஜென்ஸ்-பிரடெரிக் நீல்சன் கருத்து தெரிவிக்கையில்,

"கிரீன்லாந்து ஒன்றும் விற்பனைக்குரிய பொருள் அல்ல; இது எமது தாயகம். ஆக்கிரமிப்பு என்ற கற்பனைகளை அமெரிக்கா கைவிட வேண்டும்" எனத் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும் மேற்படி கூட்டறிக்கையின் பின்னர் வெள்ளை மாளிகை அறிக்கையொன்றை வெளியிட்டு கிரீன்லாந்தை கையகப்படுத்துவதற்கான இராணுவ நடவடிக்கை குறித்து அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

நேட்டோ என்பது 1949ஆம் ஆண்டு அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளால் உருவாக்கப்பட்ட ஒரு சக்திவாய்ந்த இராணுவக் கூட்டணியாகும்.

இதன் முக்கிய நோக்கம், உறுப்பு நாடுகளில் ஏதேனும் ஒன்று வெளிநாட்டுத் தாக்குதலுக்கு உள்ளானால், மற்ற அனைத்து நாடுகளும் இணைந்து அதற்குப் பாதுகாப்பு வழங்குவதாகும்.

இது "கூட்டுப் பாதுகாப்பு" என்று அழைக்கப்படுகிறது. தற்போது இதில் அமெரிக்கா, பிரித்தானியா, பிரான்ஸ்,டென்மார்க் உள்ளிட்ட 32 நாடுகள் உறுப்பினர்களாக உள்ளன.

இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு சோவியத் யூனியனின் ஆதிக்கத்தைத் தடுப்பதற்காக உருவாக்கப்பட்ட இந்த அமைப்பு, இன்று சர்வதேச அளவில் அமைதி மற்றும் பாதுகாப்பைப் பேணுவதில் முக்கிய பங்கு வகிக்கிறது. இதன் தலைமையகம் பெல்ஜியம் நாட்டின் புருசெல்ஸ் நகரில் அமைந்துள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் - 08.01.2025




இன்றைய நாளைக் கையாள்வது கடினமாக இருக்காது. வளர்ச்சி குறித்து சுதந்திரமாக முடிவெடுக்கும் உறுதியான மனநிலை காணப்படும். சிறிது முயன்றால் வெற்றி காணலாம்.

பணியிடத்தில் சிறந்த நிலையில் இருப்பீர்கள். உங்கள் மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறுவீர்கள்.உங்களுக்கு புதிய வாய்ப்புகள் கிடைக்கும்.

உங்கள் துணையுடன் இனிமையான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள்.இதனால் இருவரிடையேயான புரிந்துணர்வு வலுப்படும்.

இன்று பண வரவு காணப்படும். அதிர்ஷ்டம் காணப்படும். இன்று பணத்தை சேமிப்பீர்கள்.

உங்களிடம் காணப்படும் ஆற்றல் காரணமாக இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று உங்கள் வளர்ச்சியில் சில தடைகள் காணப்படும். சிறப்பாக திட்டமிடுதல் மற்றும் யுக்திகளை கையாள்வதன் மூலம் வெற்றி பெறலாம். அமைதியாக இருந்து பத ற்ற த்தை தவிர்ப்பதன் மூலம் நன்மை கிடைக்கும்.

பணிகளை முன்கூட்டியே திட்டமிடுவதன் மூலம் தவறுகள் நேராமல் தடுக்கலாம். இதனால் உங்கள் பனியின் தரம் உயரும்.

உங்கள் துணையின் விருப்பபடி நடந்து கொள்வதன் மூலம் மகிழ்ச்சியை தக்க வைத்துக் கொள்ளலாம். வேறு விதமாக செயல்பட்டால் குழப்பமும் பதட்டமும் ஏற்படும்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக இருக்காது. என்றாலும் பூர்வீகச் சொத்து மற்றும் எதிர்பாராத வகையில் பணம் கிடைக்கும்.

இன்று ஆரோக்கியத்தில் பெரிய அளவிலான பிரச்சினைகள் ஏதும் இருக்காது.




இன்று தேவையற்ற மனக் குழப்பங்கள் சுமையாக இருக்கும். நம்பிக்கையுடன் இருந்தால் நன்மை காணலாம்.

உங்கள் பணியில் தவறுகள் நேரும். கவனமாக பணியாற்றினால் சிறப்பாக செயலாற்றலாம்.

உங்கள் துணையிடம் குழப்பமான மன நிலையை வெளிப்படுத்துவீர்கள். மனதை அமைதியாக வைத்துக் கொண்டு உங்கள் துணையுடன் மகிழ்ச்சியை அனுபவியுங்கள்.

இன்று நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்காது. பண இழப்பின் காரணமாக ஏமாற்றம் நிறைந்து காணப்படும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது. கால் வலி ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்று உங்கள் திட்டங்களில் பலன் கிடைக்கும் இன்று எடுக்கும் முக்கிய முடிவுகள் நல்ல பலனைத் தரும்.

பணியிடச் சூழல் சிறந்த முறையில் செயலாற்றும் வகையில் இருக்கும். உங்கள் பணியில் திருப்தி அடைவீர்கள்.

உங்கள் துணையுடன் அன்பையும் புரிந்துணர்வையும் பகிர்ந்து கொள்வீர்கள். உங்களின் இந்த சகஜமான போக்கு உங்கள் துணையை மகிழ்விக்கும்.

நிதிநிலைமை இன்று சாதகமாக இருக்கும். உங்கள் சேமிப்பு ஆற்றல் அதிகரிக்கும். அது உங்களுக்கு மகிழ்ச்சி அளிக்கும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். அமைதியான குடும்பச் சூழல் உங்களை ஆரோக்கியமாக வைத்திருக்கும்.




இன்று உங்கள் வளர்ச்சியில் சில தடைகள் காணப்படும். நீங்கள் வெற்றி பெறுவதற்கு நம்பிக்கையுடன் இவைகளை சமாளிக்க வேண்டும்.முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்க வேண்டும்.

பணியின் போது தவறுகள் நேர வாய்ப்புள்ளது. திட்டமிட்டு அட்டவணையிட்டு பணியாற்றுவது அவசியம்.

உங்கள் துணையுடன் வாக்குவாதம் செய்ய முற்படலாம். அமைதியான போக்கை மேற்கொண்டு உறவில் நல்லிணக்கத்தை தக்க வையுங்கள்.

பயணத்தின் போது பண இழப்புகள் நேரலாம். பணத்தை கவனமாகக் கையாள வேண்டும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது. பதட்டம் காரணமாக தலைவலி ஏற்படலாம்.




இன்று சில சௌகரியங்களை விட்டுக்கொடுக்க வேண்டியிருக்கும். மகிழ்ச்சியை தக்க வைக்க நீங்கள் சிறப்பாக செயல்பட வேண்டும்.

பணியின் போது தவறுகள் ஏற்பட வாய்ப்புள்ளது. திட்டமிட்டு பணியாற்றுவது விளைவுகளை மேம்படுத்த உதவிகரமாக இருக்கும். சக பணியாளர்களுடன் தவறான புரிந்துணர்வு காணப்படும்.

நீங்கள் விஷயங்களை தீவிரமான போக்கில் எடுத்துக் கொள்வதனால் உங்கள் துணையுடனான உறவு பாதிக்கப்படும். இனிமையான வார்த்தைகளைப் பேசுவதன் மூலம் நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

பணபுழக்கம் மகிழ்ச்சிகரமாக இருக்காது. பணத்தை கவனமாகக் கையாள வேண்டும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது.




இன்று கடினமான சூழ்நிலைகளை கையாளும்போது கவனமாக இருக்க வேண்டிய நாள். இன்று கோபம் மற்றும் பதற்றத்துக்கு ஆளாவீர்கள். அமைதியும் நம்பிக்கையும் கொள்ள வேண்டும்.

பணிகள் அதிகமாக காணப்படும். பணியிடத்தில் சில சௌகரியங்களை விட்டுக்கொடுக்க நேரும். உங்கள் மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்காது.

உங்கள் கோபத்தை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். உறவில் நல்லிணக்கத்தை பராமரிக்க நீங்கள் சகஜமான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும்.

பணப்புழக்கம் குறைவாக இருக்கும். தேவையற்ற செலவுகள் கவலையை உண்டாகும்.

அசௌகரியம் காரணமாக ஆரோக்கியம் பாதிக்கப்படும். தோல் சம்பந்தமான பிரச்சினைகளும் தூக்கமின்மையும் காணப்படும்.




இன்று வெற்றிகரமான நாளாக இருக்கும். இன்று உங்கள் இலக்குகளில் வெற்றி பெற அதிக முயற்சி எடுக்க வேண்டும். இன்று ஓய்வின்றி செயலாற்றுவீர்கள். செயல்களை எளிதாக கையாள்வீர்கள். இன்று முக்கிய முடிவுகள் எடுக்க உகந்த நாள்.

உங்கள் பணிகளை திறம்பட செய்து முடிப்பீர்கள். உங்கள் மேலதிகாரிகளின் அங்கீகாரம் கிடைக்கப் பெறுவீர்கள்.

உங்கள் துணையுடன் அமைதியாக நடந்து கொள்வீர்கள். நீங்கள் இருவரும் சேர்ந்து பொழுதுபோக்கு விஷயங்களை கண்டு மகிழ்வீர்கள்.

இன்று பண வரவு காணப்படும். இன்று உங்கள் வங்கியிருப்பு உயர்வதைக் காண்பீர்கள். புதிய முதலீட்டிற்கான முடிவுகளை எடுக்கலாம்.

# இன்றைய ராசி பலன்கள் - 08.01.2025




இன்றைய நாள் உங்களுடைய இலக்குகளை அடைய சரியான முயற்சி எடுக்க உகந்த நாள். உங்கள் செயல்களை எளிதாக செய்வீர்கள். உங்கள் உறுதி மற்றும் தைரியம் மூலம் வெற்றி பெறுவீர்கள்.

பணியிடத்தில் நன்மை கிடைக்கும். உங்கள் செயல்திறன் உங்களுக்கு மகிழ்ச்சியையும் திருப்தியையும் அளிக்கும்.

நீங்களும் உங்கள் துணையும் மகிழ்ச்சியான தருணங்களை அனுபவிப்பீர்கள். இதனால் மிகுந்த திருப்தி ஏற்படும்.

நிதிநிலைமை ஸ்திரமாக இருக்கும். நல்ல சேமிப்பு நிலையை பராமரிப்பீர்கள்.

இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக காணப்படும்.




இன்று உங்கள் செயல்களில் கவனமாக இருக்க வேண்டியது அவசியம். எதிர்மறை எண்ணங்களை வளர்த்துக் கொள்ளாதீர்கள். நம்பிக்கையுடனும் மகிழ்ச்சியுடனும் இருங்கள்.

பணியிடத்தில் அமைதியான சூழ்நிலை காணப்படாது. சக பணியாளர்கள் மற்றும் உங்கள் மேலதிகாரிகள் உங்களை புறக்கணிப்பது போலவும் தவிர்ப்பது போலவும் உணர்வீர்கள். உங்கள் பணிக்கு அங்கீகாரம் கிடைக்காது.

உங்கள் துணையிடத்தில் பொறுமையின்மையும் கவனமற்ற வார்த்தைகளும் இருவருக்குமிடையே மகிழ்ச்சியற்ற தன்மையை ஏற்படுத்தும். இத்தகைய நடத்தையை தவிர்ப்பதன் மூலம் மகிழ்ச்சியை அனுபவிக்கலாம்.

பணப்புழக்கம் குறைவாக இருக்கும். தேவையற்ற செலவுகள் ஏற்படும். இன்று சேமிப்பதற்கும் இயலாத நிலை இருக்கும்.




இன்று உங்கள் வளர்ச்சியில் சில தடைகள் காணப்படும் என்றாலும் உறுதியுடனும் கவனமுடனும் செயல்பட்டு அதனை சமாளித்து வெற்றி காண்பீர்கள்.

வேலை தொடர்பான பயணம் காணப்படும். பயணம் கடினமாக இருக்கும் மற்றும் நீங்கள் சில அதிருப்தியான சூழ்நிலையை சந்திப்பீர்கள்.

உங்கள் துணையுடன் கடுமையாக நடந்து கொள்வீர்கள். உங்கள் அணுகுமுறையை மாற்றிக் கொள்வதன் மூலம் இருவரும் நல்லுறவை பராமரிக்கலாம்.

இன்று வரவு செலவு இரண்டும் இணைந்து காணப்படும். இன்று செலவுகள் அதிகம் காணப்படுவதால் சேமிக்க இயலாது.

இன்று பதற்றம் காணப்படும். எனவே இன்று இதனை தவிர்த்தல் சிறந்தது.




இன்று நீங்கள் அதிகப் பணியில் மூழ்கி இருப்பீர்கள். புதிதாக ஒன்றை அடைவதில் உறுதியாக இருப்பீர்கள். கடினமாக உழைப்பதன் மூலம் வெற்றி காண்பீர்கள்.

பணியிடச் சூழல் சிறந்த செயல்திறன் ஆற்ற சாதகமாக இருக்கும். உங்கள் வேலைத் தரம் உங்களின் திறமையை பறைசாற்றும். நீங்கள் பணி சம்பந்தாமான சந்திப்பில் கலந்து கொள்வீர்கள். உங்கள் கருத்துக்களை தெளிவாக கூறுவீர்கள்.

உங்கள் துணையுடன் அன்பான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள். எதிர்கால முடிவுகளைப் பற்றி கலந்தாலோசித்து பரஸ்பரம் ஒரு முடிவுக்கு வருவீர்கள்.

உங்கள் கடின உழைப்பின் மூலம் ஊக்கத்தொகை மற்றும் சலுகைகள் வகையில் பண வரவு காணப்படும். அது உங்களுக்கு உற்சாகத்தை அளிக்கும்.

# வவுனியாவில் இராணுவத்தினரின் வசமுள்ள காணிகளை விடுவிக்க ஜனாதிபதி இணக்கம்

## சத்தியலிங்கம் எம்.பி. தெரிவிப்பு



வவுனியா மாவட்டத்தில் நீண்டகாலமாக இராணுவத்தின் வசமுள்ள பொதுமக்களின் காணிகளை விடுவித்தல் மற்றும் வீதிகளைத் திறக்க ஜனாதிபதி இணக்கம் தெரிவித்தார் என இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் பத்மநாதன் சத்தியலிங்கம் தெரிவித்துள்ளார்.

நேற்று ஜனாதிபதி தலைமையில் நடைபெற்ற பாதுகாப்பு அமைச்சின் ஆலோசனைக்குழு கூட்டத்தில் ஜனாதிபதி படைத்தரப்பினருக்கு இது தொடர்பில் ஆலோசனை வழங்கினார் என அவர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கடந்த ஜுன் மாதம் நடைபெற்ற ஆலோசனைக்குழு கூட்டத்தில் வவுனியா மாவட்டத்தில் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ள பொதுக்காணிகளை விடுவித்தல், பாதுகாப்பு வலயத்தில் மூடப்பட்டுள்ள வீதிகளைத் திறப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென கோரிக்கை விடுத்திருந்தேன். அதன் தொடர்ச்சியாக இன்று (நேற்று) நடைபெற்ற கூட்டத்திலும் அது தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

முதற் கட்டமாக இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ள மூன்று முறிப்பு தச்சங்குளம் பிரதான வீதிக்கு பதிலாக நோத்கேற்வே ஹோட்டலிற்கு பக்கத்தில் செல்லும் வீதியை மக்கள் பயன்படுத்தக்கூடியதாக புனரமைப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அத்துடன் கனகராயன்குளத்தில் 561 பிரிகேட் முகாம் அமைந்துள்ள பிரதேசத்தில் உள்ள பொதுக்காணிகள், மக்களுக்கு சொந்தமான காணிகளை விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்படுமென ஜனாதிபதி உறுதியளித்தார். - எனத் தெரிவித்தார்.